# கற்பகம் திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00

மலர்-07 | ஜனவரி-2015 | இதழ்-81


## குறளமுதம்-81

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-9 அறத்துப்பால் விருந்து ஓம்பல்**

இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

கணவனும் மனைவியும் வீட்டில் இருந்து தம்மையும் தம் மக்களையும் தம் பொருட்களையும் பேணிக்காத்து வாழ்வதெல்லாம், விருந்தினரைப் பேணி அவருக்குப் பல வகையிலும் உதவி செய்வதற்கே ஆகும்.

■ அங்கத்தவர், பணியாளர், மகளிர்குழு, முன்பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு ■

# 7 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள்

## சமூக மேம்பாடு, கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சமாசத்தால் வழங்கப்பட்டன!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங் களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு சமூக மேம்பாடு, கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் பாடசாலை உபகரணங்கள் இவ்வருடமும் வழங்கப்பட்டுள் ளன.

சுமார் 3 ஆயிரம் கல்வி கற்கும் மாணவர் களுக்கு சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை சமாசம் வழங்கியுள் ளது. இச்செயற்பாடானது கடந்த 2002ம் ஆண்டு தொடக்கம் சமூக மேம்பாடு கல்வி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வருவதுடன் ஒவ்வொரு ஆண்டும் பல இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த வருடமும் சுமார் 4 ஆயிரம் மாணவர்களுக்கு ரூபா 10 இலட் சம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



கோப்பாய் சங்கம் அங்கத்தவர், பணியாளர்களுக்கு தைப்பொங்கல் பொதி வழங்கியபோது....



அச்சுவேலி சங்கம், மழை காரணமாக தொழில் பாதிப்புற்ற தனது அங்கத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கியபோது..

## சம்பள உயர்வுக்கு நடவடிக்கை

வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் தனது உறுப்பினர்களது வாழ்வாதார நெருக்கடியினைப் போக்குவ தற்கு அவர்களது வேதனத்தை கணிசமான அளவுக்கு அதி கரித்து வழங்குமாறு உரியவர்களை வலியுறுத்தி கடந்த வரு டம் நவெம்பர் மாதம் மாபெரும் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க மாநாட்டினை நடத்தியிருந்தது.

இம்மநாட்டில் முக்கியமான 3 அம்சக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. இதில் பிரதானமாக கூட்டுறவு ஊழியர்க ளின் சம்பளத்தில் 50 வீதம் அதிகரிப்பு செய்யப்படவேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. (2ம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுற்றுலா செல்ல ஏற்பாடு!

சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர். பணியாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக் கோடு அடுத்த மாத முற்பகுதியில் கல்விச்சுற்றுலா ஒன் றினை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

## பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன!

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்த ணிகள், சமாசம், சித்த வைத்திய கூட்டுறவு சங்கம் என்பன தமது அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு பொங்கல் பொதிகளை வழங்கின.

இவ்வருடம் தைப்பொங்கலை அங்கத்தவர்கள், பணி யாளர்கள் சிறப்பாக கொண்டாடுவதற்காக சங்க நிதியிலிருந்து இப்பொதிகளை வழங்கி உதவி யுள்ளன.

கோண்டாவில், தெல்லிப்பளை, சுன்னா கம், யாழ்ப்பாணம், (8ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

**சிந்தனைத்துளி**

"வட்டமிட்டு பருந்து தன் இரையை பிடிப்பதைப் போல, திட்டமிட்டு செயற்படுவதன்மூலமே எமது இலக்குகளை அடையமுடியும் - அறிஞர்-

## கற்பகக்கரு

### சங்கங்களின் வரவு-செலவுத் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு 43வது ஆண்டில் தமது காலடியை எடுத்து வைக்க தயாராகி வருகின்றது.

42 ஆண்டுகளாக இந்நிறுவனங்களின் முன்னோடிகளின் நல்ல சிந்தனைகளையும் வழிகாட்டல்களையும் தமது மனதில் கொண்டு செயற்பட்ட அங்கத்தவர்கள். பணியாளர்களின் பூரணமான ஒத்துழைப்பினால் இந்நிறுவனம் நிலைத்து நின்று, நிறுவனம் சார்ந்தவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அரியல சேவைகளை ஆற்றுவதற்கு இம்முன்னோடிகளின் வழிகாட்டல்களே உதவியுள்ளன.

சங்கங்கள், கொத்தணிகள், சமாசம், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் என்பன தமது 2015ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் போது, அதனூடாக நிறுவனத்தை எவ்வாறு செயற்திறனுடன் வெற்றிகரமாக முன்கொண்டு செல்லமுடியும் என்பதை நன்கு அலசி ஆராய்ந்து தயாரிப்பதற்கு இந்நிறுவனம் சார்ந்த பணிப்பாளர்கள், முகாமையாளர்கள், ஏனைய பணியாளர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

இவ்வருடாந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டால் இந்நிறுவனங்கள் மேலும் இலாபகரமாக செயற்படவும் தமது திட்டங்களை விரிவுபடுத்தவும் முடியும்.

ஒரு கூட்டுறவு நிறுவனத்தின் அடுத்தாண்டு வரவு-செலவுத் திட்டமானது நடப்பு நிதி வருடம் முடிவதற்கு 3 மாதங்களுக்கு முன்னதாகவே தயாரிக்கப்பட வேண்டுமென்பது நியதியாகும். இந்நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு நிர்வாகமும் முகாமையும் உரிய சரியான தகவல்களை முதலிலே பெற்றுக்கொள்வதற்கு அந்நிறுவனம் தொடர்பான ஒவ்வொரு துறைகளிலும் பொறுப்புவாய்ந்த, குறிப்பாக சங்கமாக இருந்தால் கணக்காளர், கிளைக் குழுக்கள், கிளை முகாமையாளர்கள், உற்பத்தி முகாமையாளர், பகுதிப் பொறுப்பாளர் ஆகியோரிடமிருந்து உரிய தகவல்களைப் பெற்று அவற்றை நிர்வாகம் ஆராயவதுடன், கடந்த வருட வரவு-செலவுத் திட்டத்தின் குறை நிறைகளையும் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்படும் திட்டமே இவ்வருடத்துக்கான வெற்றிகரமான வரவு-செலவுத் திட்டமாக அமையும்.

இச்செயற்பாடானது இந்நிறுவனத்தின் முக்கியமான ஒரு செயற்பாடாக இருப்பதனால் குறித்த கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சிரத்தை எடுத்து இவ் வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். அதன்மூலம் நிறுவனம் கூடிய இலாபம் பெறக்கூடியதாக தமது செயற்பாட்டை விரிவுபடுத்தி அங்கத்தவர்கள், பணியாளர்களுடன், இத்துறைசார்ந்த ஏனையவர்களும் பயன் பெறக்கூடியதாக முன்னெடுத்து செல்வதற்கு வரவு-செலவுத் திட்டமே அத்திவாரமாக அமைகின்றது.

மேலும் கூட்டுறவு நிறுவனங்கள் தமது இலாபம் தரக்கூடிய பகுதிகளை இனங்கண்டு அப்பகுதிகளில் பணிபுரியும் பணியாளர்களின் ஆலோசனைகளை கட்டாயமாக பெற்றுக்கொண்டு சங்கத்தால் தாயரிக்கப்படும் வரவு-செலவுத்திட்டமே செயற்திறனுள்ளதாக அமையும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

## சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை - 1ம் பக்கத் தொடர்ச்சி

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்கள் அனைத்தையும் அழைத்து இது தொடர்பில் ஆராய்ந்து முதற்கட்டமாக 30 வீத சம்பள அதிகரிப்பினை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தீர்மானம் நிறைவேற்றி, அதனை வடமாகாண முதலமைச்சர், கூட்டுறவு அமைச்சர், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்தது.

இதன் பயனாக தற்போது இம்மாதம் 23ம் திகதி கூடிய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இவ்விடயத்தை ஆராய்ந்து, மொத்தச் சம்பளத்தின் 30 வீத அதிகரிப்பை வேதன உயர்வாக வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கூட்டுறவுத் துறைப் பொறுப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான திரு கே.சயந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## கல்விச்சுற்றுலா செல்ல.............. 1ம் பக்கத் தொடர்ச்சி

மேற்படி கல்விச் சுற்றுலாவில் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஆகியவற்றின் அங்கத்தவர் மற்றும் பணியாளர் உள்ளடங்கிய இருவர் வீதம் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கல்விச் சுற்றுலா வருடந்தோறும் சுழற்சிமுறையில் மேற்கொள்ளப்படவுள்ளதால் சங்கங்களின் அனைத்து அங்கத்தவர்கள், பணியாளர்களும் பயன் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்கல்விச் சுற்றுலாவில் முக்கியமாக கூட்டுறவுத்துறை சார்ந்த, அதிலும் பனை தென்னை வளம் சார்ந்த தொழிற்சாலைகளுடன், கண்ணாடி உற்பத்தி தொழிற்சாலை, தகரப் பேணிகளில் உற்பத்திகள் பொதி செய்யப்படும் தொழிற்சாலைகள், கித்துள் உற்பத்தித் தொழிற்சாலை, பால் பதனிடும் தொழிற்சாலை போன்றவற்றை பார்வையிடுவதுடன் தென்னிலங்கையில் சிறப்பாகச் செயற்படுகின்ற கூட்டுறவு நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய கூட்டுறவு சபையின் மொழிபெயர்ப்பாளர் திரு சலாம் அவர்கள் ஊடாக சமாசம் மேற்கொண்டுள்ளது.

மேலும் தென்னிலங்கைப் பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களையும், புராதன இடங்களையும் பார்வையிடுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்படவுள்ளன.

இக்கல்விச் சுற்றுலாவில் கலந்துகொள்ளவுள்ளவர்களின் பெயர் விபரங்களை அனுப்பாத சங்கங்கள் விரைவாக அவற்றை அனுப்பி உதவுமாறு சமாசம் கேட்டுள்ளது.






தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 92வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடத்திய அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு நிகழ்வின்போது......



# மாணவர் கல்வியில் கூட்டுறவின் பங்கு

கூட்டுறவு நிறுவனங்கள் மாணவர்கள் கல்வியில் எவ்வளவு பங்களிப்பை வழங்குகின்றன என்பதனை இங்கு நாம் பார்க்க விளைகின்றோம். அதற்கு முன்னராக கூட்டுறவு பற்றி பார்ப்போம்.

பொதுப்பொருளாதார தேவையுடைய மக்கள் தம்மோடு ஒத்த பலருடன் இணைந்து தமது கல்வி, கலை, கலாச்சார, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக உருவாக்கிய நிறுவனமே கூட்டுறவு நிறுவனமாகும். ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும், சுயஉதவி, பரஸ்பர உதவி, சிக்கனம், சேமிப்பு, என்னும் அடித்தளத்தில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் தமது உறுப்பினர்களுக்கு பல சேவைகளை வழங்கி வருகின்றது.

01. நுகர்ச்சிச் சேவை.
02. கடன் சேவை.
03. வங்கிச் சேவை.
04. பணப்பரிமாற்ற சேவை.
05. கல்விச் சேவை.
06. விபத்து நிலத்திட்ட சேவை.
07. ஓய்வூதிய சேவை.

இவை போன்ற பல சேவைகளை கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

இதில் நாம் மாணவர் கல்வியில் கூட்டுறவின் பங்குபற்றி இங்கே பார்க்க விளைகின்றோம்.

### மாணவர் கல்வி

கல்வி கற்பது என்பது ஒரு குழந்தை தாயின் கருவறையிலேயே கற்கத் தொடங்குகின்றது. பின்னர் அக்குழந்தை தாயிடம், உறவினர்களிடம், தான்வாழும் சூழல் போன்றவற்றில் கற்கத் தொடங்குகின்றது. இவற்றுக்கு மேலாக முன்பள்ளிகளின் பிள்ளைகள் தமது எழுத்து மற்றும் செயற்பாட்டு கல்வியை கற்கின்றது.

### முன்பள்ளிகள்

மாணவர்கள் முன்பள்ளியில் கல்வி கற்பதற்காக கூட்டுறவு நிறுவனங்கள் பல முன்பள்ளிகளை உருவாக்கி ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கல்விக்கான அடித்தளத்தை இடுகின்றன. மேலும் முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடை வழங்கல், ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்கல், மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடாத்துதல், ஆசிரியர்களுக்கான போட்டிகள் நடாத்துதல், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் போன்ற சேவைகளுடன் முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழாவுக்கான அனுசரணையையும் வழங்கி வருகின்றன. இவ்வாறு கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்கால மாணவர்களின், தலைவர்களின் கல்விமான்களின் வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. அது மட்டுமல்லாது மேலும் மாணவப் பருவத்தில் படிப்பதற்கு கூட்டுறவு நிறுவனங்கள் ஊக்குவிப்பு செய்தும் வருகின்றன.

### புலமைப்பரிசில் நிதி

கூட்டுறவு நிறுவனங்கள் தமது நிறுவனத்திற்கே உரிய நலத்திட்ட நடைமுறை விதியை உருவாக்கி அத்திட்டங்களுக்காக நிதியினைத்திரட்டி அவற்றினை வங்கியில் வைப்புச்செய்து கிடைக்கப் பெறும் வட்டியிலிருந்து இச்சேவையினை வழங்கி வருகின்றன. அந்த வகையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்து அவர்களுக்கான ஒரு சேமிப்பு தொகையினை வங்கியில் வைப்புச்செய்து அவர்களுக்கு வழங்குகின்றது. இதனால் அம்மாணவர்கள் மேலும் கல்வியில் அக்கறை செலுத்தக்கூடியவர்களாக வளர்க்கப்படுகின்றனர்.

### க.பொ.த (சா/த)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரத்தில் தோற்றுகின்ற மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் "A"தரச் சித்தி பெற்றால் அவர்களுக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதுடன் அவர்களும் மேடையில் வைத்துக் கௌரவிக்கப்படுகின்றனர். இதனால் பின்னால் கல்வி கற்கும் மாணவர்களும் நாங்களும் அனைத்துப் பாடங்களிலும் சிறப்பு சித்தி பெறவேண்டும் என்று ஊக்குவிக்கப்படுகின்றனர்.

> 92வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு பணியாளர்களுக்கிடையே நடாத்திய கட்டுரைப் போட்டியில் 1ம் இடம் பெற்ற அச்சுவேலி சங்கப் பணியாளர் **சு. சிறிகாந்** எழுதிய கட்டுரை பிரசுரமாகிறது.

### உயர் தொழில்நுட்பக் கல்லூரி

கூட்டுறவு நிறுவனங்களால் அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் ஏனைய கல்வி நலத்திட்டங்கள் போன்று உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு தெரிவான மாணவர்களுக்கும் உதவித் தொகைகள் வழங்கப்பட்டு பாராட்டிக் கௌரவிக்கப்படுகின்றது.

### பல்கலைக்கழக அனுமதி

மாணவர்களின் ஒவ்வொரு பருவத்திலும் ஊக்குவிப்பு வழங்கி வரும் கூட்டுறவு நிறுவனங்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் ரூபா பத்தாயிரம் வரையிலான பணப்பரிசு வழங்குவதுடன் அவர்களின் திறமைகளை பாராட்டி கௌரவித்து அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றது.

உறுப்பினர்களின் பிள்ளைகள், பணியாளர்களின் பிள்ளைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகள் போன்ற மாணவர்களுக்கான திட்டங்கள் பற்றி பார்த்தோம்.

4ம் பக்கம் பார்க்க

# மாணவர் கல்வியில்.....

3ம் பக்கத் தொடர்ச்சி

இவற்றுக்கு மேலாக கூட்டுறவு நிறுவனங்கள் மாணவர்களின் கல்விக்காக அதிகளவான நிதியினை செலவிடுவதை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் பாடசாலைகளின் பரிசளிப்பு விழாக்களுக்கான அன்பளிப்புகள் பற்றி நோக்குவோம்.

### பரிசளிப்பு விழாவுக்கான அன்பளிப்பு

கூட்டுறவு நிறுவனங்கள் தமது எல்லைப் பரப்பிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பரிசளிப்பு விழாக்களின் போது பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றன.

### விளையாட்டுவிழா அன்பளிப்பு

கூட்டுறவு நிறுவனங்கள் கல்விக்கான ஊக்குவிப்போடு மாணவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கான விளையாட்டு நிகழ்வுகளுக்கும் பிரிசில்களை வழங்கி தமது பிரதேசத்திலுள்ள மாணவர்களின் ஆரோக்கியமான கல்விக்கு வித்திடுகின்றன.

மேலும் மாவட்டக் கூட்டுறவுச் சபையானது காலத்துக்கு காலம் கூட்டுறவுதின விழா மற்றும் மகளிர்தின விழா போன்றவற்றின் போது மாவட்ட மட்டத்தில் போட்டிகளை நடாத்தி மாணவர் மத்தியில் கூட்டுறவு சிந்தனைகள், கூட்டுறவின் எழுச்சி, கூட்டுறவின் உயர்ந்த கொள்கைகள் பற்றியும் அவர்கள் அறியக்கூடிய வகையில் வளர்த்தெடுப்பதுடன் பெறுமதிமிக்க பரிசில்களும் கௌரவிப்பும் வழங்கி வருகின்றனர்.

மாணவர் கல்வியுடன் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு இணைகின்றன என்பது பற்றி ஆராய்ந்துள்ள அதேவேளை, கூட்டுறவுக் கொள்கையின் அடித்தளத்தில் மாணவர் மத்தியில் உருவான கூட்டுறவு பற்றி நாம் நோக்குவோம்.

### பாடசாலை கூட்டுறவுச் சங்கம்

இலங்கையில் முதன் முதலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலேயே பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

கல்வி பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து உருவாக்கிய பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப காலங்களில் மாணவர்களின் கற்றல் உபகரணங்களையும் பாடப்புத்தகங்களையும் மலிவான விலையில் கொள்வனவு செய்து நியாய விலைக்கு வழங்கி வந்தன. அது மட்டுமல்லாது பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்தி அதன்மூலம் கிடைக்கப்பெறும் இலாபத்தினை மாணவர்களின் கல்விக்காக செலவு செய்தனர். இதன் மூலம் மாணவர்களும் கூட்டுறவும் இரண்டறப் பின்னிப் பிணைந்து காணப்பட்டன. அத்தோடு மாணவர் மத்தியில் சிக்கனம், சேமிப்பு, சுய உதவி, பரஸ்பர உதவி, விட்டுக் கொடுப்பு போன்ற உயர்ந்த பண்புகளும் வளர்த்தெடுக்கப்பட்டன.

இவ்வாறு பல்வேறு கட்டங்களிலும் மாணவர்களின் கல்வியில் பங்களிப்பு செய்துவரும் கூட்டுறவு நிறுவனங்கள் காலத்துக்கு காலம் தமது திட்டங்களை மாணவர்களின கல்வி வளர்ச்சிக்காக அதிகளவுக்கு உள்வாங்கி ஒரு மங்களகரமனா அறிவியல் வளர்ச்சிபெற்ற கல்வி, கலை, கலாச்சாரம், பொருளாதாரத்தில் போதிய வளர்ச்சிகண்ட சமுதாயத்தை - உருவாக்குவதற்காக தொடர்ந்து பங்களிப்பு வழங்கிவரும் என்பதில் சிறிதளவேனும் ஐயங் கொள்ளத் தேவையில்லை.

கூட்டுறவு நிறுவனங்களின் உதவி பெற்று கல்வி பயிலும் மாணவர்கள் நாளைய கூட்டுறவு இயக்கத்தின் தலைவர்களாகவும் தூண்களாகவும் மிளிருகின்றவேளை ஒரு கூட்டுறவு சமுதாயத்தை முழுமையாக நாம் காணமுடியும்.

மேலும் கூட்டுறவு நிறுவனங்களின் உதவிபெற்று வளர்த்தெடுக்கப்பட்ட மாணவர்கள் இன்று மருத்துவத்துறையிலும், பொறியியல்துறையிலும், கலைப்பிரிவிலும், வணிகப் பிரிவிலும் கற்றுக் கொண்டிருப்பதை கண்கூடு காண முடிகின்றது.

மாணவர் கல்வியில் கூட்டுறவு நிறுவனங்கள் அக்கறையோடு செயற்படுகின்றனர். அழியாத சொத்தாகிய கல்வியை வளர்த்தெடுப்பதில் ஆர்வமாக உள்ளனர். அதிலும் குறிப்பாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன அபரிமிதமான அக்கறை கொண்டுள்ளன என்பதை உறுதியாக பார்க்கமுடிகின்றது.











அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த மாதம் தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் பொதிகளை சங்க அங்கத்தவர், பணியாளர்களுக்கு வழங்கியது. அத்துடன் அண்மையில் பெய்த அடை மழை காரணமாக தொழில் பாதிப்புற்ற அங்கத்தவர்களுக்கு நிவாரணத்தையும் வழங்கியிருந்தது. இதன்போது பிடிக்கப்பட்ட படங்கள்.

# நிகழ்வுகளின் நிழல்கள்

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால்
நடத்தப்பட்ட 92வது சர்வதேச கூட்டுறவுதின விழா நிகழ்வின்பதிவுகள் சில......



சிறுகதை

# காதல் அழிவதில்லை

சி.சிவறஞ்சினி, அச்சுவேலி.

(கடந்த இதழ் தொடர்ச்சி)

தனக்கும் அவளுக்கும் இருந்த காதல் தொடர்பை சொல்லும் போதே சாமினி அவனுக்கு எழுதிய கடிதங்களைக் காண்பித்து "நானும் அவளும் எவ்வளவு தூரம் ஒருவரை ஒருவர் விரும்பியிருந்தம். ஆனால் எனக்கு வேலை இல்லை என்று சொல்லிவிட்டு வெளிநாட்டு மாப்பிள்ளையை கல்யாணம் செய்யப்போறாள்.

நான் என்னத்துக்கு கொழும்புக்கு போறனெண்டு தெரியுமே? அவள் என்னை ஏமாத்தினதுபோலை வேறையொருவனையும் ஏமாத்துறதுக்கு முதல் அவளை கொலை செய்யப்போறன்" என ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் கத்தினான் கீர்த்தனன்.

இதுவரை கண்டிராத கீர்த்தனனின் ஆவேசமான முகத்தைப் பார்த்ததும் என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே திகைத்துப் போய் அமர்ந்திருந்தான் முகேஷ். இதுவரை காலமும் அமைதியாக வீசிய தென்றல், திடீரென புயலாக மாறி சுழன்றடித்ததை பார்த்து சற்று பயந்தான் முகேஷ். சிறிது நேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மனதிலே தைரியத்தை வரவழைத்துக்கொண்ட அவன் கீர்த்தனனைப் பார்த்து, "இதுக்கே நீ இப்பிடிக் கோவப்படுகிறாய்? நீ எந்தக் காலத்தில் இருக்கிறாய்? பழைய பஞ்சாங்கத்தைப் புரட்டிக் கொண்டு பக்கத்து வீட்டுப் பைங்கிளிக்கு பச்சைக்கொடி காட்டியதுபோல நீ இதுபோல எத்தனை விஷயங்களை பேப்பரில் பார்த்திருக்கிறாய். சாமினி இப்படிச்செய்வாள் என நான் நினைக்கக்கூட இல்லை. அது சரியடா, சாமினி வேறை சாதிப்பிள்ளையெல்லோ. அதுகள் அந்தக் குணத்தைக் காட்டுதுகள்போலை. நீ ஏன் இதற்கு கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? நீ கோபத்திலை ஏதாவது செய்து போட்டு ஜெயிலுக்குப் போனால் உன்ரை வீட்டை ஆரடா பாக்கிறது? கோபம் பாவத்தைத் தேடும் என்று சொல்லுவினம். முதலிலை நீ அமைதியாய் இரு. நான் ஒருக்கால் சாமினியோடை கதைச்சுப் பாக்கிறன்" என்று கூறினான்.

இருந்தபோதும் கீர்த்தனனின் கோபம் அடங்கவில்லை. கொழும்புக்குப் போயே ஆகவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றான். அவனின் ஆக்ரோசத்தை கண்டு அதற்கு மேலும் அவனைத் தடுப்பது இயலாத விடயம் என உணர்ந்த முகேஷ், "சரி கொழும்புக்கு போறதெண்டால் போய் நேரிலை கதைச்சுப் பார். அவள் உண்மையாக காதலிச்சிருந்தாள் மனம் மாறி உன்னோடை வருவாள். சரி நீ வெளிக்கிடு. நான் உன்னை பளையில் கொண்டுபோய் ரயில் ஏத்திவிடுகிறன். ஆனால் அவசரப்பட்டு எதையும் செய்யாதை. நான் போய் வெளிக்கிட்டு வாறன்" எனக்கூறி முகேஷ் வெளிக்கிட தனது வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

கீர்த்தனன் கொழும்புக்கு செல்லும் ஆயத்தங்களை முதலில் முடித்திருந்தமையால் யாருக்கும் தெரியாமல் சாமினியுடன் தாங்கள் எடுத்திருந்த படத்தை பார்த்து ஆத்திரப்பட்டு இப்படி ஏமாற்றிவிட்டாளே என மனதிற்குள் திட்டினான். சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கு வந்த முகேஷ், கீர்த்தனனின் தாயாரிடம் "நான் கீர்த்தனனை ஏத்திக்கொண்டு போய் பளையில ரயில் ஏத்திவிட்டுட்டு வாறன்" எனக் கூறிவிட்டு தனது மோட்டார் சைக்கிளில் அவனை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். வழி நிறைய இருவரது உரையாடலும் சாமினியைப் பற்றியதாகவே இருந்தது. பளையில் புறப்பட ஆயத்தமாக இருந்த ரயிலில் கீர்த்தனனை ஏற்றிவிட்டு ரயில் புறப்படும்வரை காத்திருந்த முகேஷ், ரயில் புறப்பட்டதும் தனது மொபைல் போனை எடுத்து சாமினியின் தொலைபேசிக்கு தொடர்புகொள்ள பச்சை பட்டனை அழுத்தினான். மறுமுனையில் போன் "சுவிச் ஓவ்" செய்யப்பட்டதாக தகவல் கிடைத்தது. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தும் தொடர்பு கிடைக்கவில்லை.

கீர்த்தனன் பயணித்த ரயில் முறிகண்டியில் தரித்தபோது, கீர்த்தனன் அங்கிருந்த கச்சான் வியாபாரியிடம் 20 ரூபாவுக்கு கச்சான் வாங்கி கொறிக்க ஆரம்பித்தான். அவனது நினைவுகள் எங்கெங்கோ அலைந்து திரிந்தன. நீண்ட நேரப் பயணத்தின் பின்னர் ரயில் அனுராதபுரத்தை அடைந்தது. அங்கே பல பயணிகள் இறங்கிய அதேவேளை புதிய பயணிகள் ஏறவும் செய்தனர். இவை எதனையும் சற்றும் கவனிக்காத கீர்த்தனன், தன்னை ஏமாற்றிய அந்தப் பெண்ணின்மீது கடும் வெறுப்படைந்தவனாக "எப்போது கொழும்புக்கு போய்ச்சேருவேன்?" என்று ஆத்திரத்துடன் எண்ணிக்கொண்டிருந்தான்.

நண்பனை வழி அனுப்பிவிட்டு என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என்ற ஏக்கத்துடனும் பதட்டத்துடனும் இருந்த முகேஷ், சாமினியை தொடர்பு கொள்ள எவ்வளவு முயற்சித்தும் அவளது தொடர்பு கிடைக்காததால், நண்பனுக்கு போன் செய்தான். அவனது போனும் "சுவிச் ஓவ்" செய்யப்பட்டிருந்தமையால் முகேஷின் பயமும் பதட்டமும் மேலும் அதிகமாக, என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்தான்.

அதிகாலை வேளையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் அந்த ரயில் தரித்தபோது, உறக்கத்திலிருந்து விழித்த கீர்த்தனன், மும்மொழிகளிலும் செய்யப்பட்ட அறிவிப்பு வார்த்தைகள் காதில்விழ, ரயில் கோட்டைக்கு வந்துவிட்டது என்பதை உணர்ந்து தனது பிரயாணப் பையை தூக்கிக்கொண்டு ரயிலிலிருந்து இறங்கியவன் முச்சக்கர வண்டி ஒன்றை பிடித்து விடுதி ஒன்றுக்கு செல்லுமாறு கூறி ஏறி அமர்ந்தான்.

முச்சக்கரவண்டி ஓட்டுனர் தனக்கு தெரிந்த விடுதி ஒன்றில் இறக்கிவிட்டு, 300 ரூபா தரும்படி கேட்டான். காற்சட்டைப் பையிலிருந்த பணத்தில் 300 ரூபாவை எடுத்துக் கொடுத்துவிட்டு உள்ளே சென்று அறை ஒன்றை வாடகைக்கு பெற்றுக்கொண்டான். தனது காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சாமினியைத் தேடலாம் என எண்ணிய அவன் ஒரு குளியில் போட்டான். பின்னர் அங்கிருந்த சிப்பந்தியிடம் காலை உணவும், அன்றைய பத்திரிகை ஒன்றும் வாங்கிவருமாறு கூறி காசைக் கொடுத்துவிட்டான்.

சிறிது நேரம் அறையில் யோசனையுடன் அமர்ந்திருந்தான். அப்போது சிப்பந்தி கதவைத் தட்டும் ஓசை கேட்டு கதவைத் திறந்த அவனிடம், சாப்பாட்டையும் பத்திரிக்கையையும் கொடுத்த சிப்பந்தி அங்கிருந்து அகன்றான். உணவு உண்ண ஆரம்பித்த கீர்த்தனன், மறுகையில் பத்திரிகையை பிடித்து அதில் தனது கண்களைச் செலுத்தினான். செய்திகளை ஒவ்வொன்றாக படித்துக்கொண்டு வந்தவனின் கண்ணில் தென்பட்ட ஒரு செய்தியை பார்த்ததும் அவனது இதயத் துடிப்பு ஒரு கணம் நின்று போனது. சில கணங்கள் அப்படியே அமர்ந்திருந்தான்.

பத்திரிகையின் 3ம் பக்கத்திலேயே அந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(7ம் பக்கம் பார்க்க)

# காதல் அழிவதில்லை 1ம் பக்கத் தொடர்ச்சி

"அகிலன் விடுதியில் யாழ். யுவதி நேற்றிரவு தற்கொலை" என்று சாமினியின் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்த அந்த செய்தியே கீரித்தனனை நிலைகுலையச் செய்திருந்தது. குளிர் காய்ச்சல் வந்தவனைப் போல் உடல் நடுக்கம் எடுத்தது. ஓ........வென்று கதறியழுதான். அவனது கோபம் எல்லாம் கண்ணீரில் கரைந்து தாங்கவொண்ணா சோகத்தில் கட்டிலில் விழுந்து துடித்தான். ஏன் இப்படியொரு முடிவை அவள் எடுத்தாள் எனத் தெரியாது தவித்த அவன், கடைசியாக அவளது முகத்தை ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்ற ஏக்கத்துடன் அணிந்திருந்த அந்த ஆடையுடனேயே சாமினி தங்கியிருந்த விடுதிக்கு விரைந்தான்.

அங்கே காவல்துறையினர் அவளது உயிரற்ற உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தனர். தன்னையும் தனது சூழலையும் மறந்து அவளது உடலுக்கு மேலே விழுந்து கதறி அழுதான் கீர்த்தனன். அவனை ஒருவாறு அப்புறப்படுத்திய பொலிசார், உடலை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

சாமினி தங்கியிருந்த அறைக்குள் செல்ல யாரையும் பொலிசார் அனுமதிக்கவில்லை. "அடி பாவி! இப்படிச் செய்து போட்டியே! எங்களையெல்லாம் ஏமாற்றிப் போட்டியேடி" என்று சாமினியின் தாய் கமலம் குழறியழும் சத்தம் கீர்த்தனனுக்கு கோபத்தை எற்படுத்தினாலும் அந்தச் சமயத்தில் ஏதும் பேசாது மருத்துவமனைக்கு செல்வதற்காக ஓட்டோ ஒன்றை பிடித்து ஏறி அமர்ந்தான். சாமினியின் உடல் "போஸ் மோட்டம்" செய்யப்பட்டு தற்கொலை என மருத்துவர்கள் உறுதிப்படுத்தினார்கள். மகளின் உடலைப் பெற்றுக்கொண்ட கமலம் உடனடியாகவே யாழ்ப்பாணத்துக்கு அதனை கொண்டு வந்தாள். கீர்த்தனனும் உடனடியாகவே ரயிலேறி யாழ்ப்பாணம் புறப்பட்டான்.

யாழ்ப்பாணம் வடமராட்சியில் சாமினியின் வீட்டில் மரண ஓலம் கேட்டது. மரண வீட்டுக்கு கீர்த்தனன் முகேஷையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தான். தேம்பித் தேம்பி அழுதான். எவ்வளவோ வார்த்தைகள் பேசினான். யாரும் அவனைத் தடுக்கவில்லை. ஆனால் அந்த உயிரற்ற உடல் எதையும் காதில் வாங்கவில்லை. கிரியைகள் முடிந்து மயானத்தில் சாமினியின் உடல் தீயுடன் சங்கமமானது.

கொழுந்துவிட்டெரிந்த தீ நாக்கினை ஆறாக பெருகிய கண்ணீரின் ஊடாக வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்த கீர்த்தனன், "ஏனடி இப்பிடி செய்தனி?.. என்ன பிரச்சினை எண்டாலும் எனக்கு சொல்லியிருக்கலாம்தானே. நான் எப்பிடியாவது அதை தீர்த்து வைச்சிருப்பேனடி..." என வாய்விட்டு அழுதான்.

"கீர்த்தனனண்ணை" என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். அங்கே சாமினியின் உறவுக்காரப் பையன் ஒருவன், "சாமினி அக்கா இதை உங்களிட்டை குடுக்கச் சொல்லி தந்தவ. நான் உங்கட வீட்டை வந்தனான். ஆனால் நீங்கள் இல்லை. அதாலை ஒருவரிடமும் குடுக்காமல் வைச்சிருந்தனான். இந்தாங்கோ!" என்று கூறி ஒரு கடிதத்தை நீட்டினான்.

நடுங்கிய கைகளால் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கத் தொடங்கிய கீர்த்தனனின் இதயம் சுக்குநூறாக வெடிக்கத் தொடங்கியது.

"பிரியமுள்ள கீர்த்தனனுக்கு, நான் எழுதும் இறுதிக்கடிதம்" என ஆரம்பித்திருந்தாள் சாமினி.

"இக் கடிதம் உங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் நான் இந்த உலகைவிட்டே சென்றிருப்பேன். பண்பாடு, கலாச்சாரம் எல்லாவற்றையும் கட்டிக்காக்கும் யாழ். மண்ணில் பிறந்து, படிக்கவேண்டும் என ஆசைப்பட்டு, உயர் கல்வி கற்று என்னுடைய எண்ணம்போல எல்லாம் கிடைக்கப்பெற்று சந்தோஷமாக சிறகடித்து பறந்தவேளை, என் இதயச் சிறையில் வந்து ஒய்யாரமாக அமர்ந்துகொண்டீர்கள். உங்களது அன்பாலே என் மனம் முழுதும் நிறைந்திருந்தீர்கள். இந்தப் பிறவியில் அல்ல, ஏழு பிறப்பிலும் நீங்கள் என்னோடு சேரவேண்டும் என நான் இறைவனைப் பிரார்த்தித்து இருந்தேன்.

வெளிநாட்டு பண மோகம் பிடித்த பெற்றோரின் சொல்லைத் தட்டவும் முடியாமல், காதலித்தவனுடன் வாழவும் முடியாமல் கலங்கும் பேதை இவள். நான் எடுக்கும் முடிவு நிச்சயமாக உங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது என உணர்ந்தாலும் பெரியவர்களை மதிக்கவும், மூத்தோர் சொல் கேட்கவும், ஒருவனுக்கு ஒருத்தி எனவும் வளர்க்கப்பட்ட நான், கணவனாக மனதார வரித்துக் கொண்ட உங்களைவிட்டு வேறு ஒருவருடன் வாழப்பிடிக்காத உங்கள் சாமினி எடுத்திருக்கும் இந்த முடிவு, இலக்கியத்து கண்ணகி போலவோ, சீதையைப் போலவோ இல்லாவிட்டாலும், சாதாரண மானிடப் பிறவியிலே மகத்துவமான எம் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் என நினைக்கிறேன்.

என்னை விட்டு உங்களால் வாழமுடியாது என நினைக்கும்போது என்னால் தாங்க முடியாமல் இருந்தாலும் பேதைப் பெண்ணால் வேறு என்னதான் செய்யமுடியும்? என்னை மன்னித்து விடுங்கள். கண்ணீரால், நனைந்த இந்த எழுத்துக்கள் சாட்சியாக நான் அடுத்த பிறப்பிலும் உங்களையே காதலிப்பேன். இது சத்தியம்!"

கடிதத்தை படித்து முடித்த கீர்த்தனன், தன் மார்பை பிடித்தபடி மண்ணிலே வேரற்ற மரம்போல் சாய்ந்தான். உண்மைக்காதல் அவனது உயிரை அவளிடம் சேர்த்தது. நட்பின் சிகரமான முகேஷ் மட்டும் தனிமரமாக நடைப்பிணமாக வாழ்கின்றான்.

(முற்றும்)

## கணினிக் குடும்பம்



பொதுவாக கணினிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

01. இலக்கமுறைக் கணினி.
02. ஒத்திசைக் கணினி.
03. கலப்பினக் கணினி

### இரும முறைக் கணினி

கணிதமுறைமைச் செயற்பாட்டின் இறுதி வடிவமாக "இரும முறை" ( 0,1 ) இரு இலக்க அதியுயர் செயற்பாட்டில் இலக்கமுறைக் கணினி இயங்குகின்றது. இலக்கமுறைக் கணினி கூட்டும் செயற்பாட்டினை மட்டும் அடிப்படையாகத் தெரிந்திருக்கிறது. மிகுதி பெருக்கல், பிரித்தல் படிமூலங்கள் யாவும் கூட்டலாக மாற்றப்பட்டு பின்னர் உரிய செயற்பாட்டுக்கு மாற்றிக் கணக்கிடப்படுகிறது.

### ஒத்திசைக் கணினி

"அனலொக்" என்பது ஒரு கிரேக்க மொழிச் சொல்லாகும். இரு வேறு ஒரே வகைப்பட்ட பொருட்களுடன் ஒப்பீட்டுப் பெறுமதி காணல் என்ற அர்த்தமுடையது. இவ்வகைக் கணினியின் செயற்பாடுகள் அனைத்தும் ஒப்பீட்டளவு முறையில் அதாவது எண்ணுவதைவிட மின்சாரக் குறிகாட்டி முறையில் அளவிடும் செயற்பாடுடையது.

### கலப்பினக் கணினி

இலக்கமுறை, ஒத்திசை ஆகிய இரண்டு செயற்பாடுகளின் நல்லவற்றை ஒன்றிணைத்து உருவானதே கலப்பினக் கணினியாகும். தேவைப்படும் போது இலக்கமுறை, ஒத்திசைச் செயற்பாடுகளை தனித்தும் ஒருமித்தும் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாற்றீடு செய்து பயன்படுத்தவும் இக்கணினி அமைப்புப் பயன்படுகிறது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு நிவாரணம்

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மழை தொழில் பாதிப்புற்ற தமது அங்கத்தவர்கள், மற்றும் பணியாளர்களுக்கு நிவாரணமாக சுமார் ரூபா 6 இலட்சம் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை வழங்கியுள்ளது.

இச் சங்கத்தின் அங்கத்தவர்களின் உற்பத்தி முழுவதும் தென்னை வளம் சார்ந்த உற்பத்தியாக காணப்படுகின்றது. கடந்த மார்கழி மாதம் பெய்த அடை மழை காரணமாக இச்சங்க அங்கத்தவர்களின் தொழில் முற்றாக பாதிக்கப்பட்டது. இந்நிலைமையை கருத்தில் கொண்ட சங்க நிர்வாகம், சுமார் 200 அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அத்தியாவசியப் பொருட்களை வழங்கி உதவியுள்ளது.

இதேபோல யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கத்தின் மழையால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி அங்கத்தவர்களுக்கு சங்க நிர்வாகம் நிவாரணம் வழங்கி உதவியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சகாய நிதியத் திட்டம்; செயற்படுத்த நடவடிக்கை

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இத்துறைசார்ந்த அனைத்து அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களின் நலன் கருதி சகாய நிதிய நலத் திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பொங்கல் பொதிகள்.............

1ம் பக்கத் தொடர்ச்சி

அச்சுவேலி, மானிப்பாய், சங்கானை, வலிகாமம் கொத்தணி, சமாசம் போன்ற பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களும் மற்றும் யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கமும் வழங்கியுள்ளன.

எதிர்வரும் காலங்களில் ஏனைய சங்கங்களும் இச்சங்கங்களைப் பின்பற்றி தாமும் தமது அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கும் இப்பொங்கல் பொதிகளை வழங்கி அவர்களை சங்கத்தின்பால் ஈர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சமாசம் கேட்டுள்ளது.

## பத்தாண்டு நிறைவு மலர் வெளியீட்டுக்கு நடவடிக்கை

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன் புரிக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு பத்தாண்டு நிறைவு மலர் ஒன்றினை வெளியிட சங்க நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இம்மலர் வெளியீடு தொடர்பாக மலர்க்குழு ஒன்றுதெரிவு செய்யப்பட்டு அக்குழுவின் முதலாவது கூட்டம் இம்மாதம் 26ம் திகதி சமாச மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு சு.சிறிகாந் தலைமையில் நடைபெற்றது.

இதில் மலர் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டது. இம் மலருக்கான பெயரினை "தீபம்" என சூட்டுவதெனவும் இம்மலர் அச்சிடுவதற்கான செலவினை விளம்பரங்கள் மூலமும் நன்கொடை மூலமும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், சங்கத்தின் வரலாறு, சங்க உறுப்பினர்கள், மற்றும் சங்க சிறப்பு நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் என்பனவும் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.